O.S. No: 100/2025
பெயர்:செல்வம்
**பி.சா. 4**
10-10-2025

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கும்பேஸ்வரன் கோயிலில் கிளார்காக வேலை பார்க்கிறேன் . நீதிமன்றத்தில் இருக்கும் வழக்குகளுக்கு ஆஜராவேன் . ஸ்ரீ ஐய்யனார் கோவில் என்பது எங்கள் துணைக்கோவில் தான் . ஆதி கும்பேஸ்வரர் கோவில் உட்பட்ட கோவில் தான் ஐய்யனார் கோவில் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் எங்கள் செயல் அலுவலர் தான் இந்த கோவில்களையும் நிர்வாகம் செய்கிறார் . ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஸ்ரீ ஐய்யனார் கோவிலை இந்து அறநிலைய துறை எப்போது கையகபடுத்தியது என்று ஆவணங்கள் நீதிமன்றத்தில் உள்ளது . அவ்வாறு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . ஆதி கும்பேஸ்வரர் சொத்து பட்டியலில் தாவா சொத்து இல்லையென்றால் ஆதி கும்பேஸ்வரரின் சொத்து பட்டியல் தனி . ஸ்ரீ ஐய்யனார் கோயில் சொத்து பட்டியல் தனி . ஸ்ரீ ஐய்யனார் கோயில் சொத்து பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறோம் . நான் நீதிமன்றத்தில் தவறான தகவலை சொல்கிறேன் என்றாலும் , ஸ்ரீ ஐய்யனார் கோயில் சொத்து பட்டியலை தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல . ஸ்ரீ ஐய்யனார் கோயில் எங்கள் கும்பேஸ்வரர் கோயில் கட்டுப்பாட்டில் இல்லை என்றால் சரியல்ல . அதற்கு தனி பரம்பரை அறங்காவலர்கள் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல . சுப்ரமணியன் என்பவர் தான் அந்த கோயிலின் பரம்பரை அறங்காவலர் என்றால் அவர் உயிருடன் இருந்தவரை இருந்தார் . அதன்பின் கோவிலை இந்து அறநிலை

துறையினரிடம் ஒப்படைத்துவிட்டார் . பரம்பரை அறங்காவலர் சுப்ரமணியன் தாவா கோவிலை நிர்வாகத்திடம் ஒப்படைத்ததற்கு ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . இந்து அறநிலை துறை எந்த தேதியில் கையகபடுத்தியதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரில்ல . கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த சான்று பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி . நான் சொன்னவாறு மேலக்காவேரி கிராம நிர்வாக அலுவலர் எந்த சான்றும் வழங்கவில்லை என்றாலும் , இந்த சான்று வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த சான்றில் நம்பத்தன்மையை நிரூபிக்க அந்த கிராம நிர்வாக அலுவலரை தான் விசாரிக்கவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் ஐய்யனார் கோவிலுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல . தாவா சொத்திற்கும் ஆதி கும்பேஸ்வரர் கோவிலுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.